கருக்கம்

சொத்துவரி – ஒசூர் நகராட்சி – 1998 ஆம் ஆண்டு அக்டோபரில் உயர்த்தப்பட்ட சொத்து வரி குறித்து ஆய்வு செய்து சமர்ப்பிக்கப்பட்ட தொடர்புடைய குழுவின் அறிக்கை மீது ஆணை –வெளியிடப்படுகிறது

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4)துறை

அரசாணை (நிலை) எண்.89

நாள் 21.06.2007

படிக்க:-

1) நகராட்சி நிர்வாக ஆணையரின் நேர்முக கடித எண். 18555/2007/ஆர்1, நாள் 27.4.2007
2) நகராட்சி நிர்வாக ஆணையரின் நேர்முக கடித எண். 18555/2007/ஆர்1, நாள் 7. 5.2007

- - - - -

ஆணை:

12.4.2007 அன்று நடைபெற்ற ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் மானியக்கோரிக்கை விவாதத்தின்போது ஒசூர் நகராட்சியில் மற்ற நகராட்சிகளைக் காட்டிலும் கூடுதலாக சொத்துவரி விதித்து இருப்பதாக கூறி ஒசூர் பகுதி மக்கள் அதிகப்படியான சொத்துவரியென செலுத்தாமல் இருப்பதன்பேரில், மாண்புமிகு அமைச்சர் (ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி) அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என சட்டமன்றத்தில் உறுதிமொழி அளித்தார்கள்.

2.இதன்பேரில், பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதத்தில் ஒசூர் நகராட்சியில் 1998 அக்டோபரில் உயர்த்தப்பட்ட சொத்துவரி குறித்து ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் பணியாற்றும் திரு. வே.க. சண்முகம், இணை ஆணையர் (நிர்வாகம்), திரு. வெ. பிச்சை, கூடுதல் இயக்குநர் மற்றும் திரு. இரா. லிங்கசாமி, நிதி ஆலோசகர் ஆகியோர் அடங்கிய குழு ஏற்படுத்தப்பட்டது என்றும், மேற்கண்ட குழு 18.4.2007 அன்று ஒசூர் நகராட்சிக்கு சென்று ஆய்வு செய்தது என்றும், மேற்படி குழு தனது அறிக்கையில், ஒசூர் நகராட்சி வரி விதிப்பு சம்மந்தப்பட்ட பதிவேடுகளை மேற்படி குழு பார்வையிட்டதில், 1.10.98--க்கு பின்னர் புதிய கட்டிடங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வரி விதிப்புகள், 1.10.98–க்கு முன்னர் விதிக்கப்பட்ட சொத்துவரியைக் காட்டிலும், பல மடங்கு கூடுதலாக இருப்பதாக தெரிவித்துள்ளது என்றும், எனவே நகராட்சிக்கும் வருவாய் பாதிக்காமல், பொது மக்களுக்கும் அதிக சிரமமில்லாமல் வரி செலுத்தும் வகையில் A மண்டலத்திற்கு சதுர அடிக்கு ரூ.2.50–க்கு பதிலாக ரூ.1.25, B மண்டலத்திற்கு ரூ.2.00 பதிலாக ரூ.1.00 மற்றும் C மண்டலத்திற்கு சதுர அடிக்கு ரூ.1.80--க்கு பதிலாக ரூ.0.90 என நிர்ணயம் செய்யலாம் ( அதாவது பாதி அளவுக்கு குறைத்து ) எனக்

குழு பரிந்துரை செய்துள்ளது என்றும், இவ்வாறு குறைத்தால் எதிர்காலத்தில்
ஆண்டொன்றுக்கு ரூ.83.25 லட்சம் கேட்பு இழப்பு ஏற்படுவதோடு, 1998 II அரையாண்டு
முதல் 31.3.2007 வரையிலான காலத்திற்குரிய இழப்பு ரூ.4.48 கோடியாக இருக்கும் என்றும்
தெரிவித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

3.மேலும், பார்வை இரண்டில் படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதத்தில்
5.5.2007 அன்று ஒசூரில், ஒசூர் நகராட்சி தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்களுடன்
ஒசூர் பகுதியில் வசூலிக்கப்படும் சொத்துவரி குறைப்பு பற்றி கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டது என்றும், மேற்படி கூட்டத்தில், இணை நகராட்சி நிர்வாக ஆணையர், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் மற்றும் கிருஷ்ணகிரி தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோரும் கலந்து கொண்டனர் என்றும், மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்ட பெரும்பாலான நகர மன்ற உறுப்பினர்கள், ஏற்கனவே ஒசூர் நகர்மன்றத்தால் நிறைவேற்றப்பட்ட நகர்மன்ற தீர்மானத்தின்படி வரி நிர்ணயம் செய்யுமாறும், அதாவது சதுர அடிக்கு A, B, C மண்டலங்களுக்கு தற்போது உள்ள ரூ.2.50, ரூ.2.00 மற்றும் ரூ.1.80 என்பதனை முறையே 80, 65 மற்றும் 50 பைசாக்கள் என்ற அடிப்படையில் வரி விதிக்க வேண்டும் கேட்டுக் கொண்டனர் என்றும், ஒசூர் நகரமன்றத் தலைவர் தற்போது உள்ள வரி விதிப்பினை 50% ஆக குறைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார் என்றும், அதுபோன்று கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினரும் மண்டல சொத்து வரி விதிப்பினை பொதுமக்களுக்கு சிரமமில்லாத வகையில் குறைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி கூட்டம் முடிவு பெற்ற பின்னர், மாவட்ட ஆட்சியர், இணை நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் ஒசூர் பகுதியில் சொத்து வரி விதிப்பில் உள்ள குறைபாட்டினை கண்டறிய அமைக்கப்பட்ட குழு உறுப்பினர்களுடன் மேற்படி வரி குறைப்பினால் நகராட்சிக்கு ஏற்படும் வருவாய் இழப்பு மற்றும் பொது மக்களின் சிரமம் பற்றியும் விவாதிக்கப்பட்டது என்றும், பின்னர் மேற்படி குழுவால் 27.4.2007 அன்று அளிக்கப்பட்ட பரிந்துரையினை ஏற்கலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார். அதன்படி, ஒசூர் நகராட்சியில் தற்போது விதிக்கப்படும் சொத்துவரி விகிதத்தை பாதியாக குறைத்து, அதாவது A மண்டலத்திற்கு சதுர அடிக்கு ரூ.2.50–க்கு பதிலாக ரூ.1.25, B மண்டலத்திற்கு ரூ.2.00 பதிலாக ரூ.1.00 மற்றும் C மண்டலத்திற்கு சதுர அடிக்கு ரூ.1.80–க்கு பதிலாக ரூ.0.90 என நிர்ணயம் செய்யலாம் என்ற குழுவின் பரிந்துரையை ஏற்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

4. நகராட்சி நிர்வாக ஆணையரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்த பின், ஒசூர் நகராட்சியில் தற்போது விதிக்கப்படும் சொத்துவரி விகிதத்தை பாதியாக குறைத்து, அதாவது A மண்டலத்திற்கு சதுர அடிக்கு ரூ.2.50–க்கு பதிலாக ரூ.1.25, B மண்டலத்திற்கு ரூ.2.00 பதிலாக ரூ.1.00 மற்றும் C மண்டலத்திற்கு சதுர அடிக்கு ரூ.1.80–க்கு பதிலாக ரூ.0.90 என நிர்ணயம் செய்யலாம் என்ற குழுவின் பரிந்துரையை ஏற்று அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. இதன்மீது தக்க மேல்நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. நீலபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், எழிலகம், சென்னை–5
ஆணையர், ஒசூர் நகராட்சி, ஒசூர்.
(நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)